தில்லை ஏந்தல் பஞ்சாயத்து தலைவர்

*162 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் வட்டம், தில்லை ஏந்தல் பஞ்சாயத்து தலைவர்மீது அந்த பஞ்சாயத்து உறுப்பினர்கள் புகார் மனு கொடுத்து 2 ஆண்டுகளாகியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: குற்றச்சாட்டுகள் மீது அவ்வப்போது விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. மெய்ப்பிக்கப்பட்ட சில ஒழுங்கீனங்களுக்காக அந்த ஊராட்சித் தலைவர் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

ஊராட்சி மன்ற எழுத்தர்களின் சம்பளம்

*163 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மன்ற (Panchayat Board) எழுத்தர்களுக்கு எந்த அடிப்படையில் சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அரசாங்கம், நகராட்சி, மாவட்ட வாரியம் ஆகியவற்றைச் சேர்ந்த கீழ்நிலை எழுத்தர்களுக்கு சம்பள ஆணைக்குழு பரிவுரை செய்த சம்பள வீதங்களின் அடிப்படையிலேயே ஊராட்சியைச் சேர்ந்த கீழ்நிலை எழுத்தர்களுக்கும் சம்பள வீதம் முடிவு செய்யப்பட்டது.

திரு. பி. எஸ். மணியன்: தலைவர் அவர்களே, சில மைனர் பஞ்சாயத்துக்களில் பணி புரியும் எழுத்தர்களுக்கு பத்து ரூபாய் என்கிற அளவுக்குக்கூட மிகக் குறைந்த சம்பளம் அந்த ஊராட்சி மன்றத்தால் நிர்ணயிக்கப்படுவதால், அது அவர்களுடைய வாழ்க்கைக்கு எந்த வகையிலும் உதவி செய்யத்தக்க நிலையில் இல்லாதிருப்பதால், குறைந்தபட்சம் மைனர் பஞ்சாயத்து எழுத்தர்களுக்கு எவ்வளவு சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்பதை நிர்ணயித்து அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அவர்களெல்லாம் அரசாங்க ஊழியர்கள் பட்டியலில் இடம் பெறுவதில்லை. அவர்கள் அந்தந்தப் பகுதிகளில் உள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களால் நியமிக்கப்படுகிறார்கள். க்ரூப் க்ளார்க் என்ற வகையில் நான்கைந்து ஊராட்சி மன்றங்களுக்கு ஒருவராக நியமித்துக் கொள்ளப்பட்டு, அவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆகவேதான், அவர்களுக்கு அந்தச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அவர்கள் அரசாங்கத்தோடு தொடர்புடையவர்கள் அல்ல.

திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த நகரப் பஞ்சாயத்துக்களில் வேலை செய்கின்ற சிப்பந்திகளைச் சர்க்கார் சிப்பந்திகளாக மாற்றி, அவர்களுடைய சம்பள விகிதத்தை மாற்றியமைக்க இந்த அரசுக்கு ஏதாவது திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அத்தகைய செயற்குறிப்பு எதும் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, பேரூராட்சி ஒன்றியங்களில் வேலை செய்கின்ற சிப்பந்திகளுக்குச் சம்பள உயர்வு கொடுக்கப்படுமா? அதே நேரத்தில் ஜீப் டிரைவர்களுக்குச் கொடுக்கப்படக்கூடிய பயணப் படி விகிதம் அவர்களுக்குக் கட்டுப்படியாகாமல் இருப்பதாகச் சொல்லுவதால், அதை உயர்த்துவதற்கும் அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அவையெல்லாம் தனியாகக் கேட்கப்பட வேண்டியவை.